

பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 37வது வார்டில் சத்தியமூர்த்தி நகரில் அமைந்துள்ள 24 வீடுகள் தீப்பற்றி எரிந்ததையொட்டி நேற்று (27.05.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்கு அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என உறுதி அளித்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர் ஜெ.டில்லிபாபு எம்.சி. வட்டக் கழக செயலாளர் செந்தமிழரசு மற்றும் நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

### சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.8.25 கோடியில்

# மயிலாப்பூரில் புதிய பல்நோக்கு மையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பணியினை தொடங்கி வைத்தார்!

சென்னை, மே.28-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.05.2025) சென்னை, மயிலாப்பூரில் உள்ள லஸ் நிழற்சாலையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.8.25 கோடி மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் அமைக்கும் பணியை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-

சென்னை நகரத்தில் பெறப்படக்கூடிய வருவாய் இந்த மாநகரத்தில் உள்ள குறிப்பாக வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் பயன்பட வேண்டும் என்பதற்காக 182 திட்டப்பணிகள் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது. தென் சென்னை, மத்திய சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் விளையாட்டு அரங்கள், பூங்காக்கள், சமுதாய நலக் கூடங்கள், நூலகங்கள், படைப்பகங்கள் என பல்வேறு பணிகள் துவக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தற்பொழுது நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் இந்த ஆண்டு 2025 இறுதிக்குள் அல்லது 2026 ஜனவரி மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகள் நடைபெற்ற வருகிறது.

**குத்தம்பாக்கம் பேருந்து நிலையம்!**

ஜூலை மாத இறுதிக்குள் குத்தம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது, விரைவில் நாங்கள் அங்கு சென்று ஆய்வு மேற்கொள்ள உள்ளோம்.

ஆதரிப்பதாக இருந்தாலும் எதிர்ப்பதாக இருந்தாலும் வெளிப்படையாக முதலமைச்சர் அவர்கள் அதனை செய்யக் கூடியவர். 2021 ஆம் ஆண்டு கோவிட் தொற்று காரணமாக நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் பங்கேற்கவில்லை. அதற்கு அடுத்த ஆண்டு நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் கலைஞர் நினைவு நாளை ஒட்டி கூட்டம் வந்ததால் நிதி அமைச்சரை அந்த கூட்டத்தில் பங்கேற்க செய்கிறோம் எனக் கூறியபோது நிதியமைச்சர் தேவை இல்லை என மறுத்ததால் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அதற்கு அடுத்த ஆண்டு நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தின் போது அன்னிய முதலீட்டை ஈர்பதற்காக வெளிநாடு சுற்றுப்பயணத்தை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டதால் கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை.

**பா.ஜ.க.வோடு உள்ள உறவு!**

கடந்த ஆண்டு ஒன்றியத்தின் நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தின் பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாக காரணத்தைச் சொல்லி அந்தக் கூட்டத்தை மறுத்தது உண்மைதான். இந்த ஆண்டு கூட்டத்தில் பங்கேற்றது குறித்து "மஞ்சக்காமாலை உள்ளவருக்கு கண்ணுக்கு காண்பதெல்லாம் மஞ்சள் தென்படுவது போல் இருக்கும்" என்பது போல்தான் உள்ளது. எங்கள் முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு பாரத பிரதமர் அவர்களை சந்தித்த போதும் கூட "தமிழகத்திற்கு மறுக்கப்படுகின்ற தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாததால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கல்வித் தொகையை திரும்ப பெற வேண்டும் என தான் வலியுறுத்தினார்".

மற்ற இயக்கத்தை போல் துள்ளி வந்து பின்புற வாசல் வழியாக பாஜகவோடு கள்ள உறவு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் தி.மு.க.விற்கு இல்லை எனவும். நேற்று முளைத்த காளான்களுக்கு எல்லாம் இன்று பதில் சொல்ல வேண்டிய தயாராக இல்லை எனவும் தெரிவித்தார்.

**மணல் கோட்டை தகர்க்கப்படும்!**

களத்திற்கு வரட்டும் அவர்கள் எந்த வகையில் அடிக்கீறார்களா அதைவிட 100 மடங்கு வேகமாக ஒரே அடியில் பிடரி சிலிர்க்கின்ற வகையில் அடிப்பதற்கு தி.மு.க. களத்தில் தயாராக நிற்கின்றது. ஏதோ ஒரு நாள் அறிக்கையில் ஏதோ ஒருநாள் ரோட் ஷோ செய்து விட்டு செல்கின்ற முதலமைச்சர் இல்லை எங்கள் முதலமைச்சர் அவர்கள் அனுதினமும் மக்களோடு மக்களாக பயணிக்க கூடியவர். 2026 ஆம் ஆண்டு மகுடம் சூட்ட தமிழக மக்கள் தயாராக இருக்கிறார்கள். இதுபோன்ற அறிக்கைகளால் திட்டமிட்டு கட்டமைக்கப்படுகின்ற இந்த கட்டுமானம் கடற்கரை கட்டிய மணல் கோட்டைக்கு சமமானது நிச்சயம் தகர்க்கப்படும், தகர்த்து எறியப்படும்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ் குமார், செயற்பொறியாளர் திருமதி. விஜயகுமாரி, மாமன்ற உறுப்பினர் திருமதி.மோ.சரஸ்வதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




26.05.2025 அன்று சென்னை, கிண்டி அண்ணாப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் முன்னிலையில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் Auto Desk நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி. கல்லூரி கல்வி இயக்கக ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி, தொழில்நுட்ப கல்வி ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் முனைவர் எம்.பி. விஜயகுமார், (ஓய்வு), அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஜே. பிரகாஷ், APAC மற்றும் Japan Autodesk Education Experiences நிறுவன இயக்குநர் கான்வே கோ மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம் 6–க்கு உட்பட்ட அரியலூர், பெரம்பலூர், திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திண்டுக்கல் மேற்கு மற்றும் திண்டுக்கல் கிழக்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்ட–மாநகரச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட–மாநகர அமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 27-05-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழாவை

# திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



திருவள்ளூர் மே 28;-

திருவாரூர் திருக்குவளையில் பிறந்து, தமிழ்நாட்டுக்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, 95 ஆண்டுகள் வரை இனத்துக்காகவும், மொழிக்காகவும், நாட்டுக்காகவும், உழைத்து இன்றைய தினம் அண்ணாவின் அருகே வங்கக் கடலோரம் ஓய்வினை மேற்கொண்டிருக்கும்

இந்தியா இதுவரை கண்டிராத எழுத்தாளரும் இலக்கியவாதியும் சமூக புரட்சியாளரும் அரசியல்வாதியம் ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராகவும், ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) தலைவராகவும் விலைமதிப்பற்றது. நுணுக்கமாக ஆராய்ந்து, ஆழமாகப் பதிந்தவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஜீன் 3 ஆம் தேதி அன்று 102 வது பிறந்த நாள் விழாவை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகத்தினர்கள் வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்

மின்சாரம் அனைத்து கிராமங்களுக்கும் செல்ல வழித்தடம் அமைத்தது கலைஞர் 1500 பேரை கொண்ட கிராமங்களுக்கும் சாலை வழித்தடம் அமைத்தது கலைஞர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைத்தது கலைஞர் குடிநீர் வடிகால் வாரியம் அமைத்தது கலைஞர்

இலவச கண்ணொளித் திட்டம் கொடுத்தது கலைஞர் பிச்சைகாரர்கள் மறுவாழ்வு இல்லம் அமைத்தது கலைஞர் கை ரிக்ஷா ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷா கொடுத்தது கலைஞர் இலவச கான்கிரீட் வீடுகளை ஒடுக்கப்பட்டோருக்கு கொடுக்கும் திட்டம் வகுத்தது கலைஞர் குடியிருப்புச்சட்டம் (வாடகை நிர்ணயம் போன்றவை) கொண்டுவந்தது கலைஞர் இந்தியாவிலே முதன் முதலில் காவல் துறை ஆணையம் அமைத்தது கலைஞர்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கென துறை அமைத்தது கலைஞர் அரசியலமைப்பில் பிற்படுத்தபபட்டோருக்கான அமைப்பை அமைத்தது கலைஞர் அரசியலமைப்பில் இட ஒதுக்கீடு BC - 31%, SC - 18 % ஆக உயர்த்தியது கலைஞர். +2 வரை இலவசக்கல்வி உருவாக்கியது கலைஞர்

மே 1, சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறையாய் அறிவித்தது கலைஞர் . வாழ்ந்த மனிதரான நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை விடுமுறையாய் அறிவித்தது கலைஞர் முதல் விவசாயக் கல்லூரி (கோவை) உருவாக்கியது கலைஞர் அரசு ஊழியர்கள் குடும்ப நல திட்டம் தந்தது கலைஞர் அரசு ஊழியர்கள் மேலான ரகசிய அறிக்கை முறையை ஒழித்தது கலைஞர் மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம் தந்தது கலைஞர் கோவில்களில் குழந்தைகளுக்கான "கருணை இல்லம்" தந்தது கலைஞர் நில விற்பனை வரையறை சட்டம் அமைத்தது கலைஞர் உருது பேசும் இஸ்லாமியர்களை பிற்படுத்தபபட்டோரில் தமிழ் இஸ்லாமியர்கள் போல் சேர்த்தது கலைஞர் மனுநீதி திட்டம் தந்தது கலைஞர் பசுமை புரட்சி திட்டம் தந்தது கலைஞர் மிக பிறப்படுத்தபபட்டோரில் வன்னியர், சீர் மரபினரை சேர்த்தது கலைஞர் மிக பிற்படுத்தபபட்டோருக்கு 20% தனி இட ஒதுக்கீடு தந்தது கலைஞர் அருந்ததியின மக்களுக்கு தனி இட ஒதுக்கீடு தந்தது கலைஞர் பழங்குடியினருக்கு 1% தனி இட ஒதுக்கீடு தந்தது கலைஞர் மிகபிற்படுத்தப் பட்டோருக்கு இலவச கல்வி தந்தது கலைஞர் வருமான உச்ச வரம்புக்கு கீழ் உள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச கல்வி இளம்கலை பட்டப்படிப்பு வரை தந்தது கலைஞர் தாழ்த்தப்பட்டோருக்கு இலவச கல்வி தந்தது

இந்தியாவிலே முதன் முறையாக விவசாயத்திற்க்கு இலவச மின்சாரம் தந்தது கலைஞர் சொத்தில் பெண்ணுக்கு சம உரிமையை சட்டமாக்கியது கலைஞர்

அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு தந்தது கலைஞர்

ஆசியாவிலே முதன் முறையாக கால்நடை மற்றும் விலங்குகள் அறிவியல் பல்கலைகழகம் அமைத்தது கலைஞர் ஏழை பெண்களுக்கு திருமண நிதி உதவி திட்டம் தந்தது கலைஞர் விதவை பெண்கள் மறுமண நிதி உதவி திட்டம் தந்தது கலைஞர் கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி திட்டம் தந்தது கலைஞர்

பெண்கள் சுய உதவி குழுக்கள் அமைத்தது கலைஞர் உள்ளாட்சி பதவிகளில் 33% பெண்களுக்கு இடஒதுக்கீடு கொண்டு வந்தது கலைஞர்.

இரு பெண் மேயரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து வர செய்தது கலைஞர்

விவசாயக்கடனை அறவே தள்ளுபடி செய்து, விவசாய மக்களை காத்தவர் கலைஞர். (2006-2011 சமச்சீர் கல்வி கொண்டு வந்தது கலைஞர் ! நெசவாளர் சமுதாயத்தினர் பெரும்பயன் எய்திட சென்வாட் வரி நீக்கம். என எண்ணற்ற பல்வேறு சாதனைகளை சொல்லிக்கொண்டு போலாம் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் மக்கள் மனதில் இன்னும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்

தமிழ்நாட்டு மக்களுக்காகவே சிந்தித்து, தமிழ்நாட்டு மக்களுக்காகவே வாழ்ந்து, இயங்கிய அந்தத் தலைவரின் பிறந்த நாளை திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முழுவதும் ஒன்றிய நகர பேரூர் கிளை வார்டுகளில் கழக கொடி தோரணைகள் கழக பாடல்கள் ஒலிபெருக்கி பொது மக்கள் பயன்பெற வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்து வெகு விமர்சையாக திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கொண்டாட வேண்டும் என திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஆரணி பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த சிலம்பாட்டம் வீரர்கள் கோவா மாநிலத்தின் நடக்கும் தேசிய அளவில் சிலம்பாட்டம் போட்டியில் கலந்து கொள்வதற்காக செல்லும் உள்ள நிலையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.ஸ்.கே.ரமேஷ்ராஜ் ஊக்கத் தொகை வழங்கி பாராட்டி அனுப்பி வைத்தார். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் நா.செல்வசேகரன், ஜான்பொன்னுசாமி, முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து.தமிழரசன், மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் நேற்று (27.05.2025) காஞ்சிபுரம், ஆர்ப்பாக்கத்தில், அக்ஷயா டிரஸ்ட் சார்பாக தொடங்கப்பட்ட அக்ஷயா வித்யாலயா இலவச ஆங்கிலவழி பள்ளியை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார். காஞ்சிபுரம் மாவட்ட திமுக செயலாளர் கே.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், நடிகர் ராஜகமல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அக்ஷயா டிரஸ்ட் நிறுவனர் ஜி.கோபாலன் நன்றியுரை வழங்கினார். அக்ஷயா டிரஸ்ட் நிர்வாகி தாசரதி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.